பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 22 புதன்கிழமை 08.12.2021 கதிர் 261

## யானை தாக்கி இருவர் மரணம்

காட்டு யானை தாக்கியதில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

சூரியவெவ - மீகஹஜந்துர பகுதியில் இன்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

2

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழப்பு

### தற்கொலையா என்ற கோணத்திலும் விசாரணை

ஹற்றன் - வட்டவளை, ரொசல்ல ரயில் நிலையத்துக்கு அருகில் இன்று முற்பகல் ரயில் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியாகியுள்ளனர்.

தாய், தந்தை , மகன் ஆகியோரே இவ்வாறு பலியாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2

## அதியுயர் சபையில் சண்டித்தனம்; விசாரணைக்கு 11 பேரடங்கிய குழு

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும், பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்களுக்கான காரணங்களைக்

2

# இந்திய முப்படைத் தலைமைத் தளபதி குன்னூரில் ஹெலி விபத்தில் உயிரிழப்பு

## தமிழகத்தில் இன்று முற்பகல் சம்பவம்; பயணித்த 14 பேருமே பலி என்று தகவல்



இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் உள்ளிட்டவர்கள் பயணித்த இராணுவக் ஹெலிக்கொப்டர் விழுந்து நொருங்கியுள்ளது.

தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் இன்று முற்பகல் 11.30 மணியளவில் நடந்த இந்த விபத்தில் அதிலிருந்த 14 பேருமே உயிரிழந்தனர்.

2

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; கைதான பத்து பேருக்கும் பிணை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்தினார்கள் எனக் கடந்த ஆண்டு மட்டக்களப்பு கிரான் பகுதியில் கைதுசெய்யப்பட்ட 10 பேரும் பிணையில் இன்று

2



## யாழ். துன்னாலையில் ஒருவர் போதைப்பொருளுடன் கைது!

யாழ்., வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் இராணுவத்தினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துன்னாலைப் பகுதியில் போதைப்பொருள் வியாபாரம் இடம்பெறுகின்றது என

2

## வடமராட்சிக் கடற்பரப்பில் 6 சடலங்கள் ஒதுங்கினவா?

### ஒரு சடலத்தை சின்பன்சியுடையது எனப் பொலிஸார் புதைத்தனர் என்று தகவல் வெளியாகியதால் பரபரப்பு

யாழ்., வடமராட்சி கிழக்கு, மணற்காடுப் பகுதியில் கடந்த நவம்பர் 16ஆம் திகதி மீட்கப்பட்ட சடலத்தை சின்பன்சி குரங்கின் உடையது எனத் தெரிவித்து விசாரணைகள் எவையுமின்றி பொலிஸார் புதைத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடமராட்சி கடற்பரப்பில் 6 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 5 சடலங்களே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக கரை ஒதுங்கிய சடலத்தைப் பொலிஸார் புதைத்துள்ளனரா? என்று சந்தேகம் எழுந்துள்ளது.

2

## சேர்.பொன் இராமநாதனின் 91ஆவது குருபூஜை இன்று

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத்துக்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப் பெருவள்ளலாருமான சேர். பொன் இராமநாதனின் 91 ஆவது குருபூஜை இன்று காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கும், சபா

2



## அரியாலையில் இன்று மோட்டார் குண்டு மீட்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை - புங்கன்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து சிறிய ரக மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யானை தாக்கி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பகுதியைச் சேர்ந்த 36 மற்றும் 49 வயதானவர்களே காட்டு யானையின் தாக்குலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, யானை - மனித மோதல் அதிகளவில் காணப்படும் பகுதிகளில் தற்போது அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளுக்கான இரண்டாம் தடுப்பை அமைப்பதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஒரே குடும்பத்தைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில் கடவையைக் கடக்க முயன்ற போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற ரயிலிலேயே இவர்கள் மோதுண்டுள்ளனர்.

இவர்கள் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டனரா அல்லது இது விபத்தா என்ற கோணத்திலும் விசாரணைகள் தொடர்கின்றன.

## அதியுயர் சபையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டறிவதற்கும், எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்குமே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவில் இடம்பெற்றுள்ள எம்.பிக்களின் விவரம் வருமாறு:-

சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, சுசில் பிரேம ஜயந்த, கயந்த கருணாதிலக, ரவூப் ஹக்கீம், அநுரபிரியதர்சன யாப்பா, விஜத ஹேரத், ரஞ்சித் மத்தும பண்டார, எம்.ஏ. சுமந்திரன்.

தமது கட்சி உறுப்பினரான மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்ட ஆளுங்கட்சியினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியினர் கடந்த இரு நாள்கள் சபை அமர்வைப் புறக்கணித்திருந்தனர்.

சபாநாயகரிடமிருந்து உரிய பதில் கிடைக்கும் வரை சபை அமர்வுகளில் பங்கேற்கமாட்டோம் எனவும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவை சபாநாயகர் இன்று நியமித்துள்ளார்.

இதற்கமைய சபை அமர்வில் ஐக்கிய மக்கள் சக்தியினர் இன்று பங்கேற்றனர்.

## முள்ளிவாய்க்கால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வருடம் மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமாருக்கு நீதிமன்றத் தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில், அவர் உட்பட 10 பேர் அன்றைய தினம் நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி, கடலில் பூக்களைத் தூவி, அஞ்சலி செலுத்தி அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த நிலையில் அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கல்குடா பொலிஸார் கைதுசெய்தனர்.

இது தொடர்பான வழக்கு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். பசீல் முன்னிலையில் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ் விண்ணப்பித்த பிணை மனுவின் அடிப்படையில் 10 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## யாழ். துன்னாலையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப்புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர், சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளமையுடன் அவரிடமிருந்து ஒரு தொகை போதைப்பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரும், அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருளும் நெல்லியடிப் பொலிஸாரிடம் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## சேர். பொன். .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தினுள் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மலர்மாலை அணிவித்து, வணக்கம் செலுத்தினார்.

இந்த நிகழ்வில், சேர். பொன் இராமநாதன் அறக்கட்டளையின் சார்பில் பேராசிரியர் சி.சிற்றம்பலம் மற்றும் முன்னாள் துணைவேந்தரும் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் வி.காண்டீபன், இந்துக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எம். வேதநாதன், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## அரியாலையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை வீட்டு உரிமையாளரால் குப்பைகளைப் புதைப்பதற்காகக் கிடங்கு கிண்டியபோதே அதற்குள்ளிருந்து இந்தக் குண்டு மீட்கப்பட்டது.

இதையடுத்து தகவலறிந்து வந்த யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று குண்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

## வரமராட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர் எனக் கூறப்படுபவரின் அறிவுறுத்தலில் சின்பன்சி குரங்கின் சடலம் என அந்தச் சடலம் புதைக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்த முடியாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமராட்சி கடற்பரப்பில் அண்மையில் 5 சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன என்றும், அவை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவை தொடர்பில் தகவல்கள் கிடைக்காதமை பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், கடந்த நவம்பர் 16ஆம் மணற்காடு கடற்கரையில் மீட்கப்பட்ட சடலம் நீதிமன்றுக்குத் தகவல் வழங்கப்படாமல் புதைக்கப்பட்டுள்ளது என வெளியாகியுள்ள தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விலங்குகளின் சடலம் மீட்கப்பட்டாலும் நீதிவானின் அனுமதியுடன் கால்நடை வைத்திய அதிகாரியின் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய முப்படைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிக்கொப்டரில் முப்படையின் தலைமைத் தளபதி, அவரது மனைவி, உதவியாளர்கள், மெய்க்காவலர்கள் உட்பட 14 பேர் பயணித்துள்ளனர்.

அவர்கள் 14 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்று இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நிலையில் இருவர் மீட்கப்பட்டனர் எனினும் அவர்களும் பின்னர் உயிரிழந்தனர் என பின்னர் தெரிவிக்கப்பட்டது.

(விரிவான செய்தி 5ஆம் பக்கத்தில்)


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.






## விளம்பரத் தொடர்புகளுக்கு
## தொலைபேசி இலக்கம்-
## 076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதித்துறைக்கே இழுக்கு

இலங்கையின் நீதி முறைமை மீண்டும் ஒரு தடவை பகிரங்கமாக ஏளனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது.

அஸாத் ஸாலியின் வழக்கில் வழங்கப்பட்டத் தீர்ப்பானது, இவ்விடயத்தில் சட்டத் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளது என்பதைக் காட்டும் சிறந்தொரு உதாரணமாகும் என்று சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

சட்டத்தை மதிக்காமல் – நீதிமன்றத்தைக் கனம் பண்ண மறுத்து – நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையில் சண்டப் பிரசண்டன் போல அட்டகாசம் பண்ணிய பிக்குவுக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனைத் தீர்ப்பு வழங்குகின்றது. அவருக்கு இலங்கையின் நிர்வாகத்துறை பொது மன்னிப்பு வழங்கி விடுவித்தமை மட்டுமன்றி, நாட்டின் நீதி முறைமை மற்றும் சட்டம் குறித்து தீர்மானிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்யும் உயர் பொறுப்பை வழங்கி கௌரவித்தும் நிற்கின்றது.

மறுபுறத்தில், தவறிழைக்காத சிறுபான்மை இனத்தலைவர் ஒருவரை பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ஒன்பது மாதங்களுக்கு மேல் சிறையில் அடைத்து மேலாண்மைத்தனம் காட்டுகின்றது சிங்கள, பௌத்த பேரினவாதம்.

இதுதான் இலங்கையின் சீர்கெட்ட நீதி நிலைமை.

தான் வெளியிட்ட கூற்றுத் தொடர்பில், கைது செய்யப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையும் வரையில் பிணை வழங்கப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அஸாத் ஸாலி மீது சுமத்தப்பட்டிருந்த அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தமையானது அரசியல் அதிகாரத்தில் இருக்கும் பலம் வாய்ந்தோரின் சட்டத்தை துஷ்பிரயோகச் செயற்பாட்டின் ஒரு நிகழ்வு என சுதந்திர ஊடக இயக்கம் குற்றம் சுமத்துவது முற்றிலும் சரியாகும்.

அஸாத் ஸாலியின் வழக்கில் ஒளிவு மறைவு என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர் ஆற்றிய உரை முற்றிலும் காணொலியில் உள்ளது. அதன் அடிப்படையில் வழக்குத் தொடர்ந்து அவரை குற்றவாளியாக காணமுடியுமா? அதற்கு சிறிதளவாவது இடமிருக்கின்றதா? – என்பவை எல்லாம் தெரியாதவர்களா சட்டமாஅதிபர் திணைக்களத்தில் இத்துணை சம்பளம் வாங்கிக் கொண்டு குந்தியிருக்கின்றார்கள்?

குற்றம் சுமத்தப்படும் எல்லோரும் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட வேண்டும் என்பதல்ல. ஆனால் ஒரு பகிரங்கப் பேச்சு விடயத்தில் – அதன் முழுக்காணொலியும் வெளிப்படையாக இருக்கத்தக்கதாக – அதில் குற்றச்சாட்டை நிரூபித்துத் தண்டனை வாங்கித் தரலாம் என்ற கருத்தில் ஒரு பிரமுகரை ஒன்பது மாதங்களுக்கு மேல் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்குப் பரிந்துரைத்த சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி யார் என்பதை வெளிப்படுத்தினால் நல்லது.

இது – இந்த நடவடிக்கை – வழமை போல இலங்கையின் நீதித்துறைக்கு மற்றோர் இழுக்கு. எந்த அதிகாரியும் இந்தத் தவறுக்குப் பொறுப்பேற்கப் போவதில்லை என்பது இலங்கையின் சட்டத்துறையின் கேவலத்துக்கு மற்றோர் சான்றுப்பத்திரம்.

இந்த வழக்கிலாவது சான்றாதாரமாகக் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரை பற்றிய காணொலி இருந்தது.

இவை எவையும் இல்லாமல், சித்திரவதை செய்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் வைத்துக் கொண்டு தமிழ் அரசியல் கைதிகளை பதினைந்து, இருபது ஆண்டுகளுக்க மேல் தடுப்புக்காவலில் சிறை வைத்திருக்கும் பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் பயங்கரவாதத் தடைச்சட்டம் அஸாத் ஸாலியின் வழக்கு விடயத்தில் மட்டும் அவர் பிரமுகர் என்று கருதியோ என்னவோ, ஒன்பத மாத காலத்திலேயே வழக்கை விசாரித்து, முடித்து, குற்றம் சுமத்தியவரை விடுவித்து, வீட்டுக்கும் அனுப்பி விட்டது.

# தரமான பொருள்களை மட்டுமே ஏற்றுமதி செய்யுமாறு கோரிக்கை

## வர்த்தக அமைச்சர் விடுப்பு



பொருள்களை ஏற்றுமதி செய்யும் போது தரம் மற்றும் நம்பிக்கையை நிலைநிறுத்தும் வகையில் பணியாற்றுமாறு ஏற்றுமதியாளர்களிடம் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

வெறும் இலாப நோக்கத்துக்காக தரம் குறைந்த பொருள்களை ஏற்றுமதி செய்தால், நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் தரமான மிளகு உற்பத்தி செய்யப்படும் நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துக்கு இணங்காத பிற கூறுகளின் கலவையால், சந்தை பாதிக்கப்பட்டு விலை வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

தரமான தேயிலைக்கு பதிலாக தூசி தேயிலை ஏற்றுமதி செய்யப்படுவதால் சந்தையும் பாதிக்கப்படும் அதேவேளை போலி கற்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால் இரத்தினக்கல் தொழில்துறையும் பாதிக்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

எனவே, வர்த்தகர்கள் தரமான பொருள்களை ஏற்றுமதி செய்வதை உறுதி செய்து, நிலையான சந்தை மற்றும் விலையை உறுதி செய்யுமாறு அமைச்சர் பந்துல குணவர்தன கேட்டுக் கொண்டார்.

மேலும், இயற்கையான நெல்லுக்கு ஒரு சந்தை வாய்ப்பு உருவாகியுள்ளதாக கூறிய அமைச்சர், சீனியின் கலவை உண்மையான டீரீக்கிளின் தரத்தையும் குறைக்கிறது எனக் குறிப்பிட்டார்.

## நடைபாதையில் நிறுத்தும் வாகனங்களை இழுத்துச் செல்ல பொலிஸார் நடவடிக்கை

நடைபாதைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களை இழுத்துச் செல்லும் புதிய நடவடிக்கையொன்றை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். கொழும்பு மற்றும் ஏனைய பிரதான நகரங்களிலுள்ள நடைபாதைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களையே இவ்வாறு இழுத்துச் செல்ல நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். குறித்த நடவடிக்கை இன்று (புதன்கிழமை) முதல் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## பல வெடிப்புச் சம்பவங்களுக்குப் பின்னர் புதிய எரிவாயு தொகுதிகள் விநியோகம்



பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வழிகாட்டுதல்களுக்கு அமைய எரிவாயு நிறுவனங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) புதிய எரிவாயு தொகுதிகளை சந்தைக்கு விநியோகித்துள்ளன.

இதன்படி, லிட்ரோ நிறுவனத்தின் சிலிண்டர் மூடியில் வெள்ளை நிற பின்னணியில் சிவப்பு நிறத்திலான நிறுவனத்தின் வர்த்தக குறியீடு பொலித்தீன் முத்திரையுடன் கூடிய புதிய எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

அதேநேரம், லாப்ஸ் நிறுவனம் அதன் எரிவாயு சிலிண்டர்களின் மூடியில் நீல நிற பின்னணியில் மஞ்சள் நிறத்திலான நிறுவனத்தின் லோகோ பொலித்தீன் முத்திரையுடன் கூடிய புதிய எரிவாயு தொகுதிகள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

## நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளுக்கு குழு நியமனம்

கடந்த 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்து, மீள இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கத் தேவையான பரிந்துரைகளை முன்வைக்க சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சபா நாயகர் தெரிவித்துள்ளார்.

குறித்த குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, சுசில் பிரேமஜயந்த, பந்துல குணவர்தன, கயந்த கருணாதிலக, ரவூப் ஹக்கீம், அனுர பிரியதர்ஷன யாப்பா, விஜித ஹேரத், ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## விநியோகிக்கப்பட்ட எரிவாயு கொள்கலன்களை மீளப் பெறுவதாக லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்ட எரிவாயு கொள்கலன்களை மீளப் பெறவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் 04 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட அனைத்து சீல் செய்யப்பட்ட (பயன்படுத்தப்படாத) எரிவாயு சிலிண்டர்களையும் திரும்பப் பெறுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை, லிட்ரோ நிறுவனத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே லிட்ரோ நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் பொருளாதார நடவடிக்கை விதிக்கப்படும்

## எச்சரிக்கிறது அமெ.



உக்ரைன்மீதுரஷ்யாபடையெடுத்தால் அதன்மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதார ரீதியாகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளக் கூடும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் நடைபெற்ற இரண்டு மணிநேர இணையவழி சந்திப்பின் போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அமெரிக்கஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.

இந்த கடுமையான நடவடிக்கையின் ஒரு பகுதியாக ரஷ்யாவின் மிகப் பெரிய வங்கி குறிவைக்கப்படலாம் என கூறப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், நேட்டோ படைகள், கிழக்கு நோக்கிச் செல்வதைத் தவிர்க்கும் உத்தரவாதத்தைவழங்குமாறுபைடனைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், தற்காப்பு ஏவுகணை முறைகள் ரஷ்யாவுக்கு அருகில் உள்ள நாடுகளில் வைக்கப்படமாட்டாது எனும் உத்தரவாதத்தையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

அந்த விவகாரங்கள் குறித்து இருநாட்டுப் பிரதிநிதிகள் மேலும் கலந்தாலோசிக்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# புதிய ஒமிக்ரோன் தொற்று கடுமையான நோயை ஏற்படுத்தாது என்கிறது உலக சுகாதார ஸ்தாபனம்




ஒமிக்ரோன் தொற்று கடுமையான நோயை ஏற்படுத்தாது என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

முதலில் தென்ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் தொற்று பிற நாடுகளுக்கு வேகமாக பரவி வரும் நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முந்தைய கொரோனா வகைகளை விட ஒமிக்ரோன் தொற்று கடுமையான நோயை ஏற்படுத்துகிறது என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை என மைக்கேல் ரியான் கூறியுள்ளார்.

நம்மிடம் மிகவும் பயனுள்ள தடுப்பூசிகள் உள்ளன என்றும் அவை தற்போதுள்ள அனைத்து வகைகளுக்கும் எதிராகச் செயற்பட்டு நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# சீனாவில் மூன்று குழந்தைகளை பெற்றுக்கொள்ள சலுகைகள் அறிவிப்பு

குழந்தைகள் பெற்றுக்கொள்வதற்கு இருந்த கட்டுப்பாட்டை நீக்கியுள்ள சீனா, 3 குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் விதமாக சலுகைகளை அறிவித்துள்ளன.

3 குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு மானியங்கள், வரிக்குறைப்பு உள்ளிட்ட சலுகைகளை மாகாண அரசாங்கங்கள் அறிவித்துள்ளன.

மேலும் பீஜிங், சிச்சுவான் மற்றும் ஜியாங்சி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட மாகாணங்கள் மகப்பேறு விடுப்பு போன்றவற்றை அறிவித்துள்ளன.

மேலும் திருமண விடுமுறையை நீடித்தல் மற்றும் தந்தைவழி விடுப்பை அதிகரிப்பது போன்ற ஆதரவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனத்த மழை காரணமாக அயர்லாந்தின் பல இடங்களில் துண்டிக்கப்பட்டது மின்சாரம்

பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக அயர்லாந்து முழுவதும் சுமார் 38,000 வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மணிக்கு 130கி.மீ. வேகத்தில் கற்று வீசுவதனால் இன்று புதன்கிழமை மதியம் வரை டொனேகல் கவுண்டியில் செம்மஞ்சள் வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மூடப்படும் என அந்நாட்டு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மின்சாரம் செயலிழந்துள்ள நிலையில் டொனேகல், கார்க், வெக்ஸ்போர்ட் மற்றும் கெர்ரி முழுவதும் 26,000 வாடிக்கையாளர்களுக்கு நீர் தொடர்பான அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 138 கி.மீ. வேகத்தில் கற்று வீசுவதனால் வேல்ஸில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதோடு பயணத் தடைகளும் ஏற்பட்டுள்ளன.

12 வெள்ள எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன எனவும் பல ரயில் சேவைகளில் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





# ஜமால் கஷோகி கொலை; ஒருவர் பாரிஸில் கைது

ஊடகவியலாளர் ஜமால் கஷோகி கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சவுதி அரேபிய நபர் ஒருவர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாரிஸில் உள்ள சார்லஸ் டி கோல் விமானநிலையத்தில்காலித்என்ற நபரை கைது செய்தமையை பொலிஸாரை மேற்கோளிட்டு பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

ஜமால் கஷோகி கொலை தொடர்பாகதுருக்கியால்தேடப்படும் 26 சவுதி நாட்டவர்களின் இவரும் ஒருவர் என நம்பப்படுகிறது.

மேலும் கைது செய்யப்பட்ட 33 வயதான குறித்த நபர் சவூதியின் முன்னாள் அரச காவலர் என்றும் அவர் தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரசாங்கத்தின் முக்கிய விமர்சகரான கஷோகி, 2018 ஒக்ரோபரில் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்தில் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய இராணுவ ஹெலிக்கொப்டர் விபத்து



தமிழகத்தின் குன்னூர் அருகே காட்டேரி என்ற மலைப்பாதையில் இந்திய இராணுவ ஹெலிக்கொப்டர் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. கோயம்புதூர் சூலூர் விமானப்படைத் தளத்திலிருந்து குன்னூர் வெலிங்டன் மையத்திற்குச் சென்றபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளான இடத்தில் மீட்கப்பட்ட இராணுவ அதிகாரிகளின் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு உள்ளன எனவும், கிழே விழுந்த ஹெலிக்கொப்டர் தீப்பிடித்ததில் உடல் கருகி உயிரிழந்த நால்வரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் முதல்கட்டத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

விபத்துக்குள்ளானஇராணுவஹெலிக்கொப்டரில் இந்திய முப்படைகளின் தலைமைத்தளபதி பிபின் ராவத் அவரது துணைவியாரோடு பயணித்தார் எனத் தெரியவந்துள்ளது. விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டரில் பயணித்தவர்களது விவரத்தை இந்திய இராணுவச் செய்தித் தொடர்பகம் வெளியிட்டுள்ளது. இந்திய முப்படைகளின் தலைமைத்தளபதி பிபின் ராவத், அவரது மனைவி, இராணுவ அதிகாரிகள் எல்.எஸ்.லிட்டர் ஹர்ஜிந்தர் சிங், பாதுகாவலர்கள் குர்சேவக் சிங், ஜிதேந்திர குமார், விவேக் குமார், சாய் தேஜா, சத்பால் ஆகியோர் பயணித்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விமானப்படையின் எம்.ஐ.17 வி5 வகை ஹெலிக்கொப்டரே இந்த விபத்தில் சிக்கியுள்ளதாகவும் விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் இந்தியவிமானப்படை தெரிவித்துள்ளது.

## நாகாலாந்தில் தாக்குதலுக்குப்பின் தடயங்களை அழிக்க பாதுகாப்புப் படையினர் முயன்றார்கள் என குற்றச்சாட்டு

நாகாலாந்தில் அப்பாவிப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், இறந்தவர்களின் உடல்களை கடத்தவும் மறைக்கவும் முயற்சி செய்தனர் எனவும் பாதுகாப்புப் படையினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாகலாந்தில் நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக, அந்த மாநில பொலிஸாரினால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள் ளது. அதில் இந்த விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தாக்குதலின்போது வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்த தொழிலாளர்களை அடையாளம் காண எந்த முயற்சியும் மேற்கொள்ளாமலே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர், என்கிற அதிர்ச்சித் தகவலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை நாகலாந்து மாநில மூத்த பொலிஸ் அதிகாரிகள் தாக்கல் செய்துள்ளனர். நடந்த சம்பவத்தில் பாதுகாப்புப் படையினரின் குற்றங்கள், கொலை மற்றும் தடயங்களை மறைக்க முயற்சி என்ற தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் குறித்த அசம்பாவிதத்துக்கு பாதுகாப்புப் படையினரின் அசாம் ரைபில் 21 பாரா சிறப்பு படைதான் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் பின்னணி குறித்து பாதுகாப்புப் படைத்தரப்பில், தீவிரவாதிகள் என சந்தேகப்பட்டு அவர்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டோம், என வருத்தம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், வாகனத்தில் பயணம் செய்த தொழிலாளர்கள், தங்களைத் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்துதற்காத்துக்கொள்ளத்தான் முயற்சித்துள்ளனரே தவிர, பாதுகாப்புப் படையினரைத் தாக்க முயற்சிக்கவில்லை, என பொலிஸ் அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

வாகனத்தில் வந்தவர்களை நிறுத்தி விசாரிக்காமல், பாதுகாப்புப் படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் என்பது குறித்த அறிக்கையில் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து, பாதுகாப்புப் படைத் தரப்பில் நடந்த கொலைகளை மறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, அடுத்தடுத்த கட்ட வன்முறைகளும் துப்பாக்கிச் சூடுகளும் எவ்வாறு நடத்தப்பட்டன என்பதும் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டின் பின்னர், இறந்தவர்களின் உடல்களை பாதுகாப்புப் படையினர் மறைத்து, வாகனத்தில் கடத்தி தங்கள் முகாமுக்குக் கொண்டு செல்ல முயன்றமையை கண்டு ஆத்திரமடைந்த பொதுமக்கள் வன்முறையில் இறங்கியதால், மீண்டும் பாதுகாப்புப் படையினர்துப்பாக்கிச்சூடுநடத்தியுள்ளர். இரண்டாவது துப்பாக்கிச் சூட்டில் மேலும் 7 நபர்கள் உயிரிழந்ததோடு, பலர் காயமடைந்தனர், என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரிவான இந்தத் தகவல்கள் அளிக்கப்பட்டும் இதுவரை சம்பந்தப்பட்ட பாதுகாப்புப்படையினர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை எனவும், பாதுகாப்புப் படையினர் நாகாலாந்து மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டதால் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினருக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரம் ரத்து செய்யப்படவேண்டும், எனவும் இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், மக்கள் அமைப்புகள், எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.





## இலக்கைத் தாக்கும் குறுகிய தூர ஏவுகணை இரண்டாம் கட்டச் சோதனையும் வெற்றி

இலத்திரனியல் இலக்கைத் தாக்கும் குறுகிய தூர ஏவுகணையின் இரண்டாம் கட்டச் சோதனையை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (டி.ஆர்.டி.ஓ.) வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

இந்தச்சோதனை ஒடிசா கடற்கரையில் உள்ள சாந்திபூர் ஒருங்கிணைந்த பரிசோதனை மையத்தில் இன்று மேற்கொள்ளப்பட்டது. குறுகிய தூரத்தில் உள்ள இலத்திரனியல் தொடர்புள்ள இலக்கைத் தேடித் தாக்கும் வகையில் இந்த ஏவுகணை, செங்குத்தான ஏவுதளத்திலிருந்து பரிசோதிக்கப்பட்டது.

ஏவுகணை சென்ற பாதை, பல கருவிகள் மூலம் சாந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை மையத்தில் கண்காணிக்கப்பட்டது. ஏவுகணையின் அனைத்துப் பாகங்களும் கருவிகளும் எதிர்பார்ப்புக்கு ஏற்ப செயல்பட்டன என்று கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் பரிசோதனையை டி.ஆர்.டி.ஓ. மற்றும் கடற்படை அதிகாரிகள் கண்காணித்தனர். ஏவுகணையின் அடுத்தகட்டச் சோதனைகள் போர்க்கப்பலில் இருந்து நடத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் பரிசோதனை கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி நடைபெற்றது. தற்போதைய சோதனை வெற்றி பெற்றதற்காக டி.ஆர்.டி.ஓ. நிறுவனத்தினர், இந்திய கடற்படையினர் மற்றும் தொழில் துறையினருக்கு இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார். இந்த ஏவுகணை, இந்திய போர்க்கப்பல்களின் பாதுகாப்புத் திறனை மேலும் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஏவுகணைச்சோதனை வெற்றிக்காக, இதன் தயாரிப்பில் ஈடுபட்ட குழுக்களுக்கு டி.ஆர்.டி.ஓ. தலைவர் டாக்டர் ஜி. சதீஷ் ரெட்டி தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளார்.

## 2,000 ரூபா நோட்டுகள் அச்சடிப்பது நிறுத்தம் இந்திய நிதித்துறை இணையமைச்சர் தகவல்

2018- 2019 ஆம் நிதியாண்டிலிருந்தே 2,000 ரூபா நோட்டுகள் அச்சடிக்க ஆணையெதுவும் கொடுக்கப்படவில்லை என்று இந்திய மத்திய நிதித்துறை இணையமைச்சரான பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கேள்வியொன்றுக்கு எழுத்துமூலம் பதில் அளித்த அவர், கடந்த 2016 ஆம் ஆண்டு பணமதிப்பிழப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து, 2,000 ரூபா நோட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி நிலைவரப்படி, 336 கோடியே 30 லட்சம் எண்ணிக்கையில் 2,000 ரூபா நோட்டுகள் இருந்தன. இவை, அப்போதைய மொத்த நோட்டுகளில் 3.27 சதவீதமாகும்.

ஆனால், கடந்த மாதம் 26 ஆம் திகதிய கணக்கெடுப்பின்படி, புழக்கத்தில் இருந்த 2,000 ரூபா நோட்டுகளின் எண்ணிக்கை 223 கோடியே 30 லட்சமாகக் குறைந்தது. இது தற்போதைய மொத்த நோட்டுகளில் வெறும் 1.75 சதவீதம் மட்டுமே.

மக்களின் பரிமாற்றத் தேவையைப் பொறுத்து ரிசர்வ் வங்கியுடன் ஆலோசனை நடத்தி, குறிப்பிட்ட ரூபா நோட்டுகளை அச்சடிக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்கிறது. ஆனால், 2018-2019 ஆம் நிதியாண்டிலிருந்தே 2,000 ரூபா நோட்டுகள் அச்சடிக்க ஆணையெதுவும் கொடுக்கப்படவில்லை. புழக்கத்திலிருக்கும் அந்த நோட்டுகள் அழுக்கடைந்ததாலும் சிதைந்ததாலும் குறைந்து வருகின்றன, என்று தெரிவித்திருக்கிறார்.



# மட்டக்களப்பு - ஈரள குளம் விவசாயிகள் வீதியை மறித்து கவனவீர்ப்பு போராட்டம்

சட்டவிரோத மண் அகழ்வு காரணமாக தங்களது வீதிகள் முற்றாக சேதமடைந்துள்ளன எனவும் மட்டக்களப்பு மண் வளம் சூறையாடப்படுகின்றதை கண்டித்தும் நேற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரள குளம் விவசாயிகள் வீதியை மறித்து போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

குறித்த போராட்டத்தில், அபிவிருத்திக் குழுத் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் தலையிட்டு உடனடியாக இதை தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரியும் மண்ணைச் சுரண்டுவதா, கிழக்கை மீட்கும் பணி என கேள்வியெழுப்பியிருந்தனர்.

மேலும் வெளி மாவட்டங்களில் இருந்து வந்த கனரக வாகனங்களை திருப்பி அனுப்பியதுடன் மண்களை ஏற்றிச்சென்ற கனரக வாகனங்களை மறித்து அனைத்து மண்ணையும் எடுத்த இடத்திலேயே கொட்டும்படியும் செய்துள்ளனர். இதையடுத்து மண்ணை ஏற்றிச் செல்வதற்கு அனுமதியைப் பெற்றிருந்த உரிமையாளர், வீதி சேதமடைந்தது வேதனைக்குரிய விடயம் எனவும் குறித்த வீதியினை தனது செலவில் செப்பனிட்டுக் தருகிறேன் எனவும் மண்ணை வெளி மாவட்டத்துக்கு அனுப்புவதற்கு அனுமதி அளிக்கப்படாது என்றும் உறுதியளித்தமையை அடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.



## கல்முனை , பாண்டிருப்பு பிரதேசங்களில் திடீரென ஏற்பட்டது கடற் கொந்தளிப்பு

கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் நேற்று அதிகாலை திடீரென ஏற்பட்ட கடற் கொந்தளிப்புக் காரணமாக கடற்கரை வீதியையும் தாண்டி குடியிருப்புப் பகுதிக்குள் கடல் நீர் புகுந்து, வெள்ளக்காடாக மாறியது.

இதனால் கல்முனை மாமாங்க விநாயகர் கோவில் மற்றும் பாண்டிருப்பு விஷ்ணு கோவில் பகுதிகளும் பல வீடு, வளவுகளும் வெள்ளத்தில் மூழ்கி, பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

கடல் நீர் புகுந்தமையால், பிரதேச மக்கள் அச்சமும் கலவரமும் அடைந்த நிலையில், அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஹென்றி மகேந்திரன், மாநகர மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து, மாநகர சபையின் கனரக இயந்திரங்கள் மூலம் அப்பகுதிகளில் தேங்கியுள்ள கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் அண்மைக்காலமாக கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரி, கல்முனை மாநகர சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலையில் ஆணின் சடலம் மீட்பு

கொக்கட்டிச்சோலையில் கச்சேனை பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றிலிருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அம்பலந்துறையைச் சேர்ந்த 47 வயதானவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட சடலத்தின் கழுத்து பாகத்தில் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன.

வீட்டில் ஏற்பட்ட முறுகல் நிலையினால், கோயிலில் உறங்கச் செல்கிறேன் எனத் தெரிவித்து வீட்டிலிருந்து புறப்பட்டு சென்ற நபரே கோயிலில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மங்குபிரிஞ் பகுதி விபத்து சாரதிக்கு கொரோனா உறுதி

திருகோணமலை-கண்டி பிரதான வீதி கப்பல்துறை மங்குபிரிஞ் பகுதியில் ஆடை தொழிற்சாலைக்குச் சொந்தமான தனியார் பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் இதுவரை 26 பேர் காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர் குறித்த விபத்து நேற்று 6. 45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குச்சவெளி பிரதேசத்தில் இருந்து கப்பல் துறை தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் செல்லும் போது இரண்டு பஸ்களை முந்திச்செல்ல முற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியதினாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்

விபத்துக்குள்ளானவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் பஸ் சாரதியான ஜெயபுர தம்பலகாமத்தை சேர்ந்த என்.டி.சமந்த (34வயது) என்பவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

மேலும் இவ் விபத்து பஸ் சாரதியின் கவனயீனத்தினால் ஏற்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மருதமுனை கடற்கரையில் சடலம் மீட்பு

கல்முனை மாநகர மருதமுனை கடற்கரையில் சடலம் ஒன்று அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்து கரையொதுங்கியுள்ளது.

குறித்த சடலம் தற்போது வரை அடையாளம் காணப்படாத நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில்,மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஆஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் ஆரம்பம் இங்கிலாந்து 147 ஓட்டங்களுக்கு சுருண்டது

ஆஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் தனது முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 147 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

5 போட்டிகள் கொண்ட பாரம்பரியமிக்க ஆஷ் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. தொடரின் முதல் போட்டி இன்று பிரிஸ்பேனில் ஆரம்பமாகியது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது. ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்த இங்கிலாந்து அணியால் தனது முதல் இன்னிங்ஸில் 147 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. ஜோஸ் பட்லர் 39 ஓட்டங்களையும் ஒலி போப் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க, அணித்தலைவர் ஜோ ரூட் உட்பட மூன்று வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

ஆஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ் 5 விக்கெட்டுக்களையும் ஜோஷ் ஹசல்வுட் மற்றும் மிட்செல் ஸ்டார்க் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். மழை காரணமாக ஆட்டம் இடையூறுக்குள்ளானதால் ஆஸ்திரேயாவின் துடுப்பாட்டம் ஆரம்பமாகாமலேயே இன்றைய நாள் ஆட்டம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது.

# ஒரே ஆண்டில் அஸ்வின் 50 டெஸ்ட் விக்கெட்டுக்கள்




நியூசிலாந்துக்கு எதிராக மும்பையில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட்டுக்களை வீழ்த்திய இந்திய சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின், இந்த ஆண்டில் அவர் 8 டெஸ்ட் போட்டிகளில் 52 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார். இதுவரை டெஸ்ட் போட்டிகளில் அவர் மொத்தமாக 427 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இவற்றில் இந்தியாவில் வைத்து அவர் வீழ்த்தியவை 300 விக்கெட்டுக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரே ஆண்டில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட டெஸ்ட் விக்கெட்டுக்களை நான்காவது தடவையாக அஸ்வின் கைப்பற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தில் அண்மையில் இந்திய அணி விளையாடிய டெஸ்ட் சம்பியன்ஷிப்இறுதிப்போட்டியிலும், இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரிலும் இவருக்கு விளையாடும் வாய்ப்பு வழங்கப்படாமலே அவர் இந்த இலக்கை எட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு முன்னதாக இந்திய அணியின் கும்ப்ளே, ஹர்பஜன் சிங் இருவரும் மூன்று தடவைகள் ஒரே ஆண்டில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆசிய இளையோர் பாரா விளையாட்டு விழா இலங்கையணி 12 பதக்கங்களை வென்றது

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் பாரா விளையாட்டு விழாவில் இலங்கை வீரர்களுக்கு 4 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 12 பதக்கங்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் ஆசிய இளையோர் பாரா விளையாட்டு விழா வரலாற்றில் இலங்கை அதிகூடிய பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது.

இம்முறை போட்டித் தொடரில் பெண்களுக்கான நீச்சலில் லைசியம் சர்வதேப் பாடசாலையைச் சேர்ந்த 16 வயதுடைய கலீனா பஸ்நாயக்க, 3 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றார்.

இம்முறை ஆசிய பாரா விளையாட்டு விழா மெய்வல்லுநர் போட்டிகளில் மட்டுமே இலங்கை வீரர்கள் ஏழு பதக்கங்களை வென்றனர்.

ஆண்களுக்கான தட்டெறிதல் மற்றும் குண்டெறிதல் ஆகிய போட்டிகளில் கேட்வே சர்வதேசப் பாடசாலையைச் சேர்ந்த 17 வயதுடைய ஜேசன் ஜயவர்தன இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும், நீளம் பாய்தல் போட்டியிலும், 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளிலும் குளியாப்பிட்டிய சூரதூத மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜனனி விக்ரமசிங்க வெண்கலப் பதக்கங்களை வென்றார். ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் கெகுனகொல்ல அரக்யால முஸ்லிம் கல்லூரியைச் சேர்ந்த மொஹமட் சப்ரான் வெள்ளிப் பதக்கத்தையும் நீளம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும் அவர் வெற்றிருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



# 19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சம்மேளனத் தொடர் இலங்கையணியில் யாழ் மாவட்ட வீராங்கனைகள் நால்வருக்கு வாய்ப்பு

பங்களாதேஷில் இம்மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியிருக்கும் 19 வயதுக்குட்பட்ட வீராங்கனைகளுக்கான சாவ் (SAFF) சம்பியன்ஷிப் கால்பந்தாட்டத் தொடரில் பங்கெடுக்கும் இலங்கை இளையோர் மகளிர் கால்பந்து அணி, இன்று பங்களாதேஷ் பயணமானது.

மொத்தம் ஐந்து நாடுகள் பங்குபெறும் 19 வயதுக் குட்பட்ட வீராங்கனைகளுக்கான தெற்காசிய கால்பந்து சம்மேளன சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்கும் இலங்கை மகளிர் கால்பந்து அணிக்காக நாடு பூராகவும் உள்ள பாடசாலைகளில் இருந்து 23 வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு வீராங்கனைகளும் இந்த அணியில் இடம்பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் ஜோகிதா, கிருசாந்தினி, வலன்டீனா மற்றும் தார்மிகா ஆகியோர் இலங்கை 19 வயதுக்குட்பட்ட மகளிர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, இந்த அணியின் பயிற்சியாளர் குழாமில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் ஆசிரியை பத்மநிதி செல்லையாவும் இடம்பெற்றிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கை 19 வயதுக்குட்பட்ட மகளிர் கால்பந்து அணி தனது முதல் போட்டியில் வரும் 11ஆம் திகதி பூட்டானை எதிர்கொள்கிறது. அடுத்தடுத்த போட்டிகளில் 13ஆம் திகதி இந்தியாவையும், 15ஆம் திகதி நேபாளத்தையும், 19ஆம் திகதி பங்களாதேஷினையும் இந்த அணி எதிர்த்தாடவுள்ளது.

லீக் சுற்றின் முடிவில் புள்ளிகள் பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் 22ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் இலங்கையர் கொலை இரு நாட்டு உறவைப் பாதிக்காதாம்!

## இலங்கை உயர்ஸ்தானிகர் அறிவிப்பு

சியல்கோட் படுகொலை இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என இலங்கை உயர்ஸ்தானிகர் மொஹான் விஜய் விக்ரம உறுதியளித்துள்ளார்.

பாகிஸ்தானும் இலங்கையும் நட்புறவு கொண்ட நாடுகளாகவே இருக்கும் என்றும் இந்தச் சம்பவம் எமது உறவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என தான் உறுதியளிக்கிறேன்எனஅவர்குறிப்பிட்டுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பாகிஸ்தான் அரசாங்கத்தின் ஆதரவைப் பாராட்டியதுடன், பாகிஸ்தான் மக்களின் அனுதாபங்களுக்கும் இரங்கலுக்கும் நன்றி தெரிவித்தமையுடன், சம்பவம் துரதிர்ஷ்ட வசமானது என்று குறிப் பிட்டார்.

மேலும் பிரியந்தவின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கைஎடுக்கும்என்றுதான்நம்புகிறேன் எனவும் இது ஒரு கொலை என்பதால், இந்தச்சம்பவத்துக்கும்பாகிஸ்தானுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதில் இலங்கை அரசு உறுதியாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு, பாகிஸ்தான் உடனடி நடவடிக்கை எடுத்திருப்பதை தாங்கள் அவதானித்தோம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தாங்கள் நண்பர்கள் என்று கூற வேண்டிய அவசியம் இல்லை என்றும் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் சமூக, பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகள் உள்ளன என்பதுடன், இந்தச் சம்பவம் தற்போதுள்ள உறவைப் பாதிக்காது என்றும் அவர் கூறினார்.

# யானைகளினால் ஏற்படும் சேதத்தை குறைக்காவிட்டால் பதவி விலகுவேன்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



காட்டு யானைகளின் தாக்குதலினால்ஏற்படும்சேதங்களை குறைக்க முடியாது போனால் தான் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வேன் என வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யானைகளின் தாக்குதலினால் தற்போது ஏற்படும் சேதங்களை அடுத்த வருடத்திற்குள் 50 வீதத்தால் குறைக்க முடியும் என இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸா நாயக்க குறிப்பிட்டார்.

அவ்வாறு முடியாவிட்டால் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி தான் பதவியை இராஜினாமா செய்வேன் என்றும் அவர் கூறினார். யானைகளினால் தேசிய உணவு உற்பத்தியில் 20 வீதமானவை அழிக்கப்பட்டு வருவதாகவும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணாமல் நாடு முன்னோக்கிச் செல்ல முடியாது என்றும் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸா நாயக்க தெரிவித்தார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து; 13,832 மீனவர்களுக்கு இழப்பீடு

*எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட, 13 ஆயிரத்து 832 மீனவர்களுக்கு, முதற்கட்டமாக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் அமைச்சின் மீதான வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு, கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.*

*கொழும்பில் 2 ஆயிரத்து 956 மீனவர்களுக்கும், கம்பஹா மாவட்டத்தில் 10 ஆயிரத்து 175 மீனவர்களுக்கும் மற்றும் களுத்துறையில் 701 மீனவர்களுக்கும்இழப்பீடுவழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்நிலையில், முதற்கட்ட இழப்பீடுத் தொகை வழங்கப்படாத 1,200 மீனவர்களின் தகவல் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என காஞ்சன விஜேசேகர உறுதியளித்துள்ளார்.*

# நாடாளுமன்றத் தாக்குதல் குறித்து ஆராயும் குழுவில் அரச மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை நியமிக்குக!

## கோருகின்றார் ரணில் விக்கிரமசிங்க

நாடாளுமன்றில் இடம்பெற்ற தாக்குதல் முயற்சி சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் குழுவிற்கு அரச மற்றும் எதிர்க்கட்சி தரப்பில் உள்ள உறுப்பினர்களை நியமிக்குமாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் பேசியபோதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவ்வாறு நியமித்தால் மட்டுமே இந்த விடயத்தில் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதுவே சிறந்த தெரிவு என்றும் சபாநாயகரிடம் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து சபையில் நிலவும் நெருக்கடிக்கு ஒரு வழியை முன்மொழிந்தமைக்காக ரணில் விக்கிரமசிங்கவிற்கு



அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நன்றி தெரிவித்தார்.

# வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு

இலங்கையில் இருந்து வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கை, ஒரு லட்சத்தைக் கடந்துள்ளதாக பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் சராசரியாக 2 லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். ஆனால் கடந்த வருடம் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 53 ஆயிரமாக அதன் எண்ணிக்கை குறைந்திருந்தாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# ஈச்சமோட்டை மறவர்குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்





யாழ். ஈச்சமோட்டை மறவர்குள புனரமைப்புப் பணிகள் இன்று (புதன்கிழமை) யாழ் மாநகர முதல்வர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் 'தூய நகரம்' திட்டத்துக்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் மறவன்குளம் துரித அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.யாழ்.மாநகர முதல்வரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அந்தக் குளத்தின் மாதிரி திட்ட வரைபும் மக்கள் பார்வைக்காக வெளியிட்டு வைக்கப்பட்டது.இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர். மாநகர சபை உத்தியோகத்தர்கள், அப்பகுதி மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2021இல் வெளியிடப்பெற்றது.